பெருமாள் ஏரி மராமத்து

*529 வினா—திரு செஞ்சி ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தென்னாற்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி தொகுதியிலுள்ள பெருமாள் ஏரி (8,000 ஏக்கர் ஆயக்கட்டு) மராமத்து செய்வதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் வேலைகள் நடைபெறாமல் இருப்பது அரசுக்குத்தெரியுமா?

(ஆ) ஆமெனில், எப்பொழுது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) மற்றும் (ஆ): இத்திட்டத்தின் வேலைகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன.

(துணை வினா இல்லை)

சிதம்பரம் வட்டத்தில் பம்புசெட்டுகளுக்கு மின்இணைப்பு.

*530 வினா—திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சிதம்பரம் தாலூக்கா காவாலகுடி, நெடுஞ்சேரி சாத்தவட்டம் ஆகிய ஊர்களில் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக்கோரி அப்ளிகேஷன் கொடுத்து பல வருடங்களாகியும் மின் இணைப்பு கொடுக்கவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

(துணை வினா இல்லை)

பெரியகுளத்தில் நீதிமன்றங்கள்

* 531—வினா திரு. கே, பண்ணை சேதுராம் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பெரியகுளத்தில் சப்கோர்ட் ஒன்றும், முதல் வகுப்பு குற்ற இயல் நீதிமன்றம் ஒன்றும் நிறுவ திட்டம் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது நிறுவப்படும்?